www.tamilarangam.net

# ஈழப்போராட்டத்தை காப்பாற்றுங்கள்!
# இப் படுகொலைகளைக் கண்டியுங்கள்!

TELO EROS EPRLF

## ஈழத் தேசிய விடுதலை முன்னணி

## EELAM NATIONAL LIBERATION FRONT

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கங்களிடம் காணப்படும் 'அரசியல் வெறுமை', 'ஆயுத மனநோய்' போன்றவற்றின் விளைவாக அவற்றின் மத்தியிலே நிலவிவருகின்றதான 'குழுவாதம்' கடந்த சில நாட்களில் ஈழத்தில் நூற்றுக்கணக்கான உயிர்களைக் கொலைசெய்து விட்டது. இதன் விளைவாக

* நூற்றுக்கும் மேற்பட்ட விடுதலைப்போராளிகள் கொலை செய்யப்பட்டுள்ளனர்!
* பல அப்பாவிப் பொதுமக்கள் இப் பாதகச் சம்பவத்தின் விளைவாக படுகொலை செய்யப் பட்டுள்ளனர்!
* மேலும் 300.க்கும் அதிகமான அப்பாவிகள் படுகாயத்திற்கு உள்ளாகி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான அராஜகக் கொடுமைகள் ஒரு புறத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் இதே வேளையில் மறுபுறத்தில் பாரிய அளவில் எம்மை அழித்தொழிப்பதற்கான 'தயாரிப்புக்களை' இனவாதம் கொண்ட சிறிலங்கா அரசு மேற்கொண்டு வருகின்றது. அதாவது

* இன்றுவரை முகாம்களை விட்டு வெளிவரப் பயந்து உள்ளே அடங்கியிருந்த சிறிலங்காவின் இனவெறிப் படைகள் "போராளிகளின் ஆயுதங்கள் பறிக்கப் பட்டு பலவீனப்படுத்தப் பட்டுள்ள இந்நிலைமையை" தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, வெளியே வரத்தயாராகின்றது.....
* புலிகள் தரைமீதும், சிறிலங்காவின் இனவெறிப்படைகள் விமான வழியாகவும் ஒரே சமயத்தில் தாக்குதலை மேற்கொள்கின்ற துர்ப்பாக்கிய நிலைமைக்குள்ளாக்கப் பட்டு போராளிகள் காணப்படுகின்றனர்....

இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் சிங்கள இனவெறிப்படையின் ஒட்டு மொத்தமான தாக்குதல்களிற்கு பலியாகும் அபாயம் தோன்றியுள்ளது. இத் தருணத்தில் இவ்வாறான அராஜகங்களை தடுத்து நிறுத்துமாறு மக்களைக் கோருகின்றோம்.

இவ்வாறான படுகொலைகள் ஒரு போதும் தமிழ் மக்களின் பிரச்சனைகளையோ, எதிர்பார்ப்புகளையோ தீர்க்கப் போவது கிடையாது. இதற்கு மேலாக எமது விடுதலைப் போராட்டம் எதிரியிடம் சரணாகதி அடைகின்ற நிலைமையே ஏற்படும்.

இப் படுகொலைகளைச் செய்தவர்கள் அதனை நியாயப்படுத்தவென சொல்கின்ற 'கொச்சைக்காரணங்கள்' எதுவாக இருப்பினும் அவை பேசித்தீர்க்கப் படக்கூடியன என்பதினையும், அதற்கான சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் எப்போதுமே இருந்து வந்தன என்பதினையும் பொது மக்கள் நிச்சயமாக அறிவார்கள்.

பொருளாதார அடிப்படையில் நிலைகுலைந்து காணப்படுகின்ற சிறிலங்காவின் இனவெறி அரசு, தன்னை நிலைப்படுத்தும் நோக்கில் 'தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கான தீர்வினைத்' தீவிரப்படுத்தியுள்ளது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதற்கு உகந்த விதமாக அரசியல் சமூக பொருளாதார மற்றும் தத்துவார்த்த அடிப்படையிலான நிலைமைகளை உள்நாட்டில் ஏற்படுத்தி, அதற்கேற்ற வகையிலான அரசியற் தந்திரங்களையும், வெளிநாட்டு உதவிகளை (குறிப்பாக பாகிஸ்தான், இஸ்ரேல், பிரித்தானிய SAS போன்றவற்றின் உதவிகள்) பெறுவதிற்கான நடவடிக்கைகளையும் செய்து வருகின்றது. இவற்றிற்காக நாட்டு மூலதனத்தின் பெரும் பகுதியை செலவு செய்து வருகின்றது. இவற்றின் விளைவாக தமிழ் பேசும் மக்கள் ஒரு சிக்கல் நிறைந்த நிலைமைக்கு அதாவது தமது எதிர்காலம் தொடர்பான எதிர்த்தாக்குதலுக்கு தன்னை தயார்ப்படுத்த வேண்டிய கட்டாய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலை தமிழ் மக்கள் அரசியல் ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தும் வகையில் ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் கடமையை தோற்றுவித்துள்ளது. இவ்வாறு செய்வதிற்கு மக்கள் மத்தியிலே 'இறுக்கமான ஐக்கியமும்', 'சமாதானமும்' அவசியமாகும். இவை உறுதியாக இருப்பின்தான் எதிரியை முறியடிப்பது சாத்தியமாகும். இதன் மூலமே ஜனநாயத்தையும் சுதந்திரத்தையும் நிலைநாட்ட முடியும்.

எமது மக்கள் மத்தியில் நிலவிவருகின்ற இத் துர்ப்பாக்கிய நிலைமைகள் சந்தர்ப்பவாதிகளிற்கும், சதிகாரர்களிற்கும் எமது போராட்டத்தில் களங்களை அமைத்துக் கொடுக்கின்றன. மேலும் இவை தனிமனித செயல்களின் பரிமாணத்தை பெற்று வருகின்றன. இவை எமது விடுதலை போராட்டத்தை சிதறடித்து விடுமோ என்ற அச்சமே ஏற்படுகின்றது.

எதிர்த்தாக்குதல் எப்பொழுதும் 'தனிப்பட்ட காரணங்களாலேயே' தோற்றுவிக்கப் படுகின்றன. விடுதலைப் போராட்டத்தினை திசைதிருப்பி தனிப்பட்ட தாக்குதல்களால் மட்டும் விடுதலையை அடைய எண்ணுதல் மக்களை அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும்.

சில விடுதலைப் போராளிகள் தாம் சார்ந்துவிட்ட நலனை மட்டும் கருத்திற்கெடுத்து அனைத்து மக்களினதும் விடுதலையை அலட்சியம் செய்கின்றனர். இவை தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புகளை 'மக்கள் விடுதலை' என்ற போர்வையில் பூர்த்தி செய்ய விளைபவர்களின் சுயநலமான செயல்கள் என்றே நாம் வலியுறுத்துகின்றோம். இத்தகைய குழுவாதங்கள் மக்களின் வரலாற்றுத் தேவைகளை ஒருபொழுதும் நிறைவேற்றப் போவதில்லை.

ஒரு விடுதலைப் போராளி எந்த இயக்கத்தைச் சேர்ந்த பொழுதிலும் அவன் தமிழ் பேசும் மக்களினது இலட்சியங்களைச் சுமந்து கொண்டிருக்கின்றான் என்பதினையும், சிறிலங்காவின் கொடிய இனவெறி அரசினது இறுதி முடிவுக்கான நாட்களை எண்ணிச்செல்கின்றான் என்பதினையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இத்தகைய உன்னத இலட்சியங்களை சுமந்து செல்லும் விடுதலைப்போராளியின் ஒவ்வோர் செயற்பாடும் மக்களினது விடுதலைக்குரியதாக அமையவேண்டும். ஆனால் இன்று நடைபெற்றுள்ள சம்பவங்கள் விடுதலைப் போராட்டத்தினை திசைதிருப்பி தனிப்பட்ட குழுக்களிடையேயான போராட்டமாகவே மாற்ற முனைவதுடன், போராட்டத்தை ஒரே இலட்சியத்திற்காக போராடும் இயக்கங்களிடையேயான அதிகாரப்போட்டியாக மாற்றுவதாகவும் கருதுகின்றோம்.

இத்தகைய அணுகுமுறைகள் மக்களை குழப்புவதுடன் போராட்டத்தினை திசைதிருப்பியும் விடும். இவ்வாறான எதிர் நடவடிக்கைகள் ஆரம்பத்திலேயே தடுக்கப்படல் வேண்டும். 'மக்களின் பங்களிப்பு இல்லாத இயக்கங்களினது நடவடிக்கைகளும், சில தனிப்பட்டவர்களது சாகசங்களும் அத்தகையவர்களது அரசியல் வெறுமைத் தன்மையிலேயே ஏற்படுகின்றன. இவ்வாறான பரிசோதனை முயற்சிகள் எதிரிக்குச் சாதகமானதாக அமைந்துவிடலாம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தற்போது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் விளைவாக, இதனைச் செய்தவர்கள் சிறிலங்கா இனவெறி அரசுக்குச் சாதகமாக செயற்பட்டிருக்கின்றனர். இச் செயலை தமக்கு சாதகமாகப் பயன்படுத்த எதிரி முயல்கின்றான். அதாவது இவ் அராஜகங்களிற்கு உட்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் உறுப்பினர்களையும், இதே நிலைமைக்கு தள்ளப்பட இருக்கும் சக இயக்கங்களையும் அவர்கள் சரணடை"யும் கட்டத்தில் தாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அவர்களிற்கு மன்னிப்பு வழங்குவதாகவும் எதிரி அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்குமேலாக மக்களின் இலட்சிய வேட்கையும், போராளிகளது பலமும் தளர்ந்துள்ள இத்தருணத்தில் அனைத்து விடுதலைச்சக்திகளையும் ஒழித்துக் கட்ட இராணுவம் தயாராகி வருகின்றது.

இத்தகைய சிக்கலான காலகட்டத்தில் அனைத்து மக்களினது உறுதியான ஆதரவும், தொடர்ச்சியான பங்களிப்புமே அவசியமானவை ஆகும். எமது மக்களினது இலட்சியங்கள் 'சாகடிக்கப்படுமேயானால் நாம் என்றுமே மீளமுடியாத அடிமைச் சமுதாய நிலைமைக்கே தள்ளப்படுவோம்.

தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக உரிமைகள் நிலைநாட்டப்படவேண்டும். இவ் உரிமைக்கான போராட்டப்பாதையில் ஏற்படுகின்ற இவ் அராஜகப் போக்குகள் அவை எத்தகைய விதத்தில் ஏற்பட்டாலும், எத்தகையவரால் மேற்கொள்ளப்பட்டாலும் அவை நிச்சயம் கண்டிக்கப்படவேண்டியதாகும். அதற்கு மேலாக அவசியம் களையப்படவேண்டியதாகும்.

ஆதலால், இவ்வடிப்படையில் தோழமை இயக்கமான தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட

* அராஜக ரீதியிலான படுகொலைகளைக் கண்டிக்கின்றோம்... இத்தகைய அராஜகங்களிற்கு எதிராக தமிழ் ஈழ விடுதலை இயக்கத்திடனான 'ஐக்கியத்தை' வெளிப்படுத்துகின்றோம்.......

* இவ்வாறான படுகொலை முயற்சிகளிற்கு எதிராகவும், இயக்க அராஜகங்களிற்கு எதிராகவும் நடவடிக்கைகளை எடுக்குமாறும், தமிழ் பேசும் மக்களின் விடுதலைப்போராட்டத்தினை தொடர்ந்தும் நடாத்த ஒத்துழைக்குமாறும் சகல ஜனநாயகசக்திகளையும் வேண்டுகின்றோம். சிறிலங்கா இனவெறிச் சூழ்ச்சியாளர்களின் இத்தகைய சதிமுயற்சிகளை இனம் கண்டு, இவற்றிற்கு துணைபோகின்ற தீயசக்திகளை அம்பலப்படுத்துவோம். ...

* ஒற்றுமையோடு கூடிய உறுதியான நடவடிக்கைகளின் மூலம் தமிழ் பேசும் மக்களது விடுதலைப்போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்போம்...

---

ஈழ மக்களும் போராட்டமும் நெருக்கடியான சூழ்நிலையில் தள்ளப்பட்டுள்ள இவ்வேளையில், விடுதலைப் புலிகளினால் தமிழீழ விடுதலை இயக்கத் தோழர் 'சிறீசபாரத்தினமும்' இயக்கப் போராளிகளும் கொலைசெய்யப்பட்டதைக் கண்டிக்கின்றோம். தொடர்ச்சியாக விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்படும் இப் படுகொலை முயற்சிகளை உடனடியாகத் தடுத்து நிறுத்தும்படி அவர்களை நிர்ப்பந்திக்குமாறு சகல தேசபக்திகொண்ட ஈழமக்களையும் வேண்டுகின்றோம்.

# ஈழத் தேசிய விடுதலை முன்னணி

பிரசுர

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்